2012 அக்டோபர் 31]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. நா. இராமகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011-2012 இல் 500 சாலை விபத்துகளில், அவசரச் சிகிச்சைக்காக 3,900 பேர்களும், அதைப்போல மேல் சிகிச்சைக்காக 390 பேர்களும், 2012-2013 இல் 400 சாலை விபத்துகளில் 4,090 பேர் அவசரச் சிகிச்சைக்காகவும், 350 பேர் மேல் சிகிச்சைக்காகவும் ஆண்டிப்பட்டி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிற இந்த நிலையில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் எனது இந்த மெய்யான, உண்மையான கோரிக்கையைக் கருத்தில்கொண்டு, இல்லையென்று மறுக்காது, அவசர முக்கியத்துவம் வாய்ந்த, அவசியம் நிறைந்த விபத்து மற்றும் அவசரச் சிகிச்சைப் பிரிவை அங்கு துவக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கைக்குக் கருத்துரு பெற்று மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.*

[குறிப்பு: *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

2. தகவல் கோரல்

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள். (குறுக்கீடுகள்) ஓர் அறிவிப்பு இருக்கிறது. நான் படித்துவிடுகிறேன். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) பிறகு பேசலாம், உட்காருங்கள். ஓர் அறிவிப்பு இருக்கிறது. படித்துவிடுகிறேன். (குறுக்கீடுகள்) எல்லாவற்றையும் எடுத்துக்கொள்ளலாம். எனக்குத் தெரிகிறது. (குறுக்கீடுகள்)*

என்னுடைய அறிவிப்பு இருக்கிறது. எல்லாவற்றையும் எடுத்துக்கொள்ளலாம். எல்லாவற்றையும் இப்பொழுதுதான் ஆய்வுக்கு அனுப்பியிருக்கிறேன். (குறுக்கீடுகள்) திரு. துரைமுருகன் அவர்கள் கேட்டதற்கு நான் அனுமதி தருகிறேன். எல்லோரும் உட்காருங்கள். நான் அறிவிப்பு செய்த பிறகு உங்களுக்கு அனுமதி தருகிறேன். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அறிவிப்பை நான் படித்த பிறகு நீங்கள் பேசுவதற்கு அனுமதியளிக்கிறேன், உட்காருங்கள்.

3. அறிவிப்புகள்

(அ) முதலமைச்சரைச் சந்திக்க அனுமதி பெற்றுத்தரக் கோரி தே.மு.தி.க. உறுப்பினர்கள் சிலர் பேரவைத் தலைவருக்கு கடிதம் அளித்த பிரச்சினையை அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பிவைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 29-10-2012 அன்று பேரவைக் கூட்டம் முடிவுற்ற பின்னர் நண்பகல் 12.00 மணியளவில் தேசிய முற்போக்கு திராவிட கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் திரு. எஸ். செந்தில்குமார், திரு. ஆர். அருள்செல்வன், திரு. து. முருகேசன் மற்றும் திருமதி ஆர். சாந்தி இராஜமாணிக்கம், மற்றும் திரு. வி.சி. சந்திரகுமார் ஆகியோர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை தொகுதிப் பிரச்சினை சம்பந்தமாக சந்திக்க அனுமதி பெற்றுத்தர வேண்டுமென்று ஒரு கடிதத்தை அளித்தனர். மாண்புமிகு முதல்வர் அவர்கள் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் முதல்வர்தான் என்றும், ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் மாண்புமிகு முதல்வர் அவர்களை நேரில் சந்திக்க நேரம் ஒதுக்குவதற்கு கோரிக்கை வைக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலாளரிடம் நேரடியாகக் கடிதம் அளிப்பதுதான் சரியான நடைமுறை என்றும் தெரிவித்தேன். அப்பொழுது அவர்கள் தாங்கள் மாண்புமிகு முதலமைச்சரிடம் தொகுதிப் பிரச்சினை சம்பந்தமாகப் பேசவேண்டியிருப்பதால் அதற்கு பேரவைத் தலைவர் ஆவன செய்யவேண்டுமென்று மீண்டும், மீண்டும் வற்புறுத்தி கடிதத்தினைத் தந்துவிட்டு வெளியிலே சென்று பத்திரிகைகளுக்கும், ஊடகங்களுக்கும், மலிவான விளம்பரம் தேடும் வகையிலே அரசியல் நோக்கத்திற்காகப் பேட்டி அளித்ததாகவே கருதத் தோன்றுகிறது.